

PORIYIYAL KADHIR

தனி பிரதி
ரூ.10/-



# பொறியியல் கதிர்


கதிர் 48 | பாரிப்பு 11 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜுலை 2016





ஜுலை 27 மக்களின் ஜனாதிபதி மேதகு டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்கள் மறைந்த நாளில் அன்னாரை நினைவு கூர்வோம்.


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்





**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 11 (2015 - 2016)

# தொடரும் நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு 22 இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் (Redesignation) வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை திரு. திருமாறன் அவர்கள் வழங்காமலேயே இருந்திருக்கலாம். ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்துதான் உதவிப் பொறியாளர் என்றும் ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து தான் பணப்பயன் என்றும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இது உச்சநீதிமன்ற பெஞ்ச் அளித்த தீர்ப்புக்கு எதிரானது. நீதியரசர்கள் மாண்புமிகு வரியவா மாண்புமிகு பட்நாயக் ஆகியோர் அளித்த உச்சநீதி மன்ற தீர்ப்பில் தேர்வு முடிவுகள் வெளியான நாள்முதல் உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களுக்கும் 23.06.2016 அன்றிலிருந்து தான் உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட மோசமான ஒரு ஆணையை யாராலும் பிறப்பிக்க முடியாது.

ஏற்கனவே பதவி பெயர் மாற்றம் வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்யும்போது ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பணிவரன்முறை செய்யப்பட்டார்கள். அரசிடமிருந்து வரப்பெற்ற ஒரு கடிதத்தை

காரணமாக சொன்னார்கள். அது தவறு என்று கடிதம் எழுதினோம். நம்முடைய கடுமையான கண்டனத்தை தெரிவித்தோம். அரசிடம் விளக்கம் கேட்கிறோம் என்றார்கள். ஆனால் விளக்கம் கேட்கவில்லை.

2003 ஆம் ஆண்டு பகுதி நேரப்பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு உதவிப் பொறியாளராக பதவிப் பெயர் மாற்றம் வழங்கியது யார் தவறு?. முழுக்க முழுக்க தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் தவறு. தாமதமாக பணிவரன்முறை செய்தது. பதவி பெயர் மாற்றம் செய்ய அனுப்பப்பட்ட கருத்துருக்கள் ஆண்டுக்கணக்கில் பரிசீலிக்காமல் தாமதப்படுத்தியதற்கு யார் பொறுப்பு?

தலைமைப் பொறியாளர் (பொது) பதவிக்கு வருபவர்கள் பெரும்பாலும் பட்டயப் பொறியாளர்களையும் பகுதி நேர பட்டம் பயின்றவர்களையும் ஒழித்து விட வேண்டும் என்ற வெறியோடுதான் வருகிறார்கள். அதனால் நிர்வாக சீர்கேடு. இத்தனை பாதிப்புகள்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தேர்வு முடிவுகள் வெளியான நாள்முதல் பதவி பெயர் மாற்றம் பெற்றுத் தரப்படும். இந்த அநியாயம் கண்டிப்பாக களையப்படும்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

# 28.05.2016 அன்று மதுரையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 28.05.2016 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் மதுரையில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். மதுரை கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் S. பிரபாகரன் அவர்களும், மையச் சங்கம் சார்பாக மைய மண்டல செயலாளர் பொறியாளர் C.P. மோகன்குமார் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் S. பாஸ்கரன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மதுரை கிளையின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

சென்ற மையச்செயற்குழுகூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் C.இராஜ் செயலாளர் சிவகங்கை கிளை, J. சீனிவாசன் துணைத் தலைவர் மதுரை கிளை, S. இராஜன் பிரேம் குமார் செயலாளர் கோவை - பொள்ளாச்சி கிளை, A.திருவேங்கடமூர்த்தி துணைத்தலைவர் சிவகங்கை கிளை, K. சிவக்குமார் செயலாளர் திருவாரூர் - நாகை கிளை,K.K.ஆறுமுகம் செயலாளர் திண்டுக்கல் கிளை, S.பாண்டியன் பொருளாளர் சேலம் கிளை, K. போஸ் இணைச் செயலாளர் மதுரைக் கிளை, V.இராமகிருஷ்ணன் பொருளாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை, N. சந்திரன் பொருளாளர் மதுரை கிளை, M.தாணுமூர்த்தி செயலாளர் கன்னியாகுமரி கிளை, K. ஆதிமூலம் செயலாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை,G..இரமேஷ் குமார் செயலாளர் இராமநாதபுரம் கிளை, G. பழனிச்சாமி முன்னாள் மண்டல செயலாளர், சி. செல்லக்குமார் இணைச் செயலாளர் தேனீ கிளை ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

நிதிச்செயலாளர் பொறியாளர் K.கமால்தீன் அவர்களால் 07.08.2015 முதல் 31.04.2016 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N. புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2015 முதல் 31.04.2016 முடிய உள்ள காலத்திற்கான வரவுசெலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் S.K. கருப்புசாமி அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்சுவடி, குறித்து உரையாற்றினார்.

அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் R. தயாளகுமார் கிழக்கு மண்டல செயலாளர், B. நாகலிங்கம் வடக்கு மண்டல செயலாளர், H. ஜாகீர் உசேன் தெற்கு மண்டல செயலாளர், C.P. மோகன் குமார் மைய மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்ல காப்பாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

அடுத்த மாநில பொதுக்குழுக் கூட்டம் வடக்கு மண்டலம் சார்பாக வேலூரில் நடத்துவது எனவும், தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மதுரை கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் R.இரவிச்சந்திரன் அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆறாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இம்மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

2. பொதுப்பணித்துறையில் நேர்மையான, நடுநிலையான நல்ல நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு IAS அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. பணிஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளித்து விட்டு அதற்கு பிறகு அந்த ஆணையை ரத்து செய்த தலைமைப் பொறியாளர் (பொது) திரு. திருமாறன் அவர்களுக்கு இம்மாநில செயற்குழு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

4. ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களை உதவிப் பொறியாளர் முது நிலையில் வைத்து 75% சதவிகித விகிதாச்சாரத்தில் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. 2007 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை கட்டிடம், நீர்ப்பாசனத்துறை என தனித்தனியாக பிரிக்காமல் பொதுவான ஒரே முது நிலையில் வைத்து உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. 2007 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை உள்ள இளநிலைப் பொறியாளர்களை கட்டிடம், நீர்ப்பாசனத்துறை என பிரிக்காமல் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி. செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் அனுப்பாமல் வேறு எந்த பதவிக்கும் பதவி உயர்வு அளிக்கக் கூடாது என இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

8. உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வில் இளநிலைப் பொறியாளர்களுக்கு உரிய 25% விகிதாச்சாரத்தில் ஐந்தாவது இடம் (Fifth Vacancy) சம்பந்தமான பிரச்சினையில் நடைமுறையில் உள்ள விதிகளின்படியும், ஏற்கெனவே உள்ள நீதிமன்ற தீர்ப்புகளின் படியும் இளநிலைப் பொறியாளர்களுக்கு அளிக்க வேண்டும் என இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வில் ஐந்தாவது இடம் (Fifth Vacancy) சம்பந்தமான வழக்கில் ஏற்கெனவே நடைமுறையில்உள்ள விதிகள், நீதிமன்ற தீர்ப்புகள், ஆகியவற்றை மறைத்து சங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக வழக்கு தொடுத்த தஞ்சாவூர் கிளையை சார்ந்த திரு. ஆண்டு, திரு. சிவக்குமார், திரு. முத்துமணி, ஆகியோர்களிடம் விளக்கம் கேட்பது எனவும் விளக்கம் திருப்தி அளிக்காத பட்சத்தில் இந்த மூவரையும் அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்குவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

10. உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வில் ஐந்தாவது இடம் (Fifth Vacancy) சம்பந்தமான பிரச்சினையில் தஞ்சாவூர் கிளை பொறுப்பாளர்கள் ஐந்து பேர் மட்டும் ஒரு கூட்டம் நடத்தி (சங்கத்தின் கொள்கைக்கு எதிராக செயல்பட மாட்டேன் என உறுதி மொழி எடுத்து விட்டு) சங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக தீர்மானம் போட்டு அனுப்பியதை இம்மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

11. சுமார் 13 ஆண்டுகள் துறையிலே இல்லாமல் 2006 ஆம் ஆண்டு விதிகளை தளர்த்தி இளநிலைப் பபொறியாளர் பதவி உயர்வு பெற்ற திரு. ஞானசேகரன், திரு. தண்டபாணி உள்ளிட்ட 8 நபர்களுக்கு விதிகளுக்கு புறம்பாக 1997 ஆண்டு இளநிலைப் பொறியாளர் முதுநிலை அளித்ததை இம்மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இதை எதிர்த்து வழக்கு தொடர்வது எனவும் தீர்மானிக்கிறது.

12. தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலுவையில் உள்ள விதித்திருத்த கோப்புகளை அனுப்ப இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. 23 பணி ஆய்வாளர் உள்ளிட்ட வர்களுக்குதொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளித்து விட்டு பின்பு அந்த ஆணையை ரத்து செய்த விஷயத்தில் முதலில் கடிதம் கொடுப்பது, பிறகு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரங்கள் கேட்டு தேவைப்பட்டால் வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

14. சென்னை இல்லக் கட்டிடத்தில் இரண்டாவது தளம் கூரையின் மீது நேரிடையாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளதால் கூரை பழுது பார்க்க முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டு உள்ளதால் இரண்டாவது தள கூரையை உடைத்து விட்டு புதியதாக கூரை அமைத்து அத்துடன் ஏற்கெனவே தீர்மானித்தவாறு மற்ற மராமத்து பணிகளையும் செய்வது என தீர்மானிக்கப்படுகிறது.

பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,

மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),

பொதுப்பணித்துறை,

சேப்பாக்கம், சென்னை -5

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் விதிகளுக்கும் உச்சநீதி மன்ற தீர்ப்புக்கும் முரணாக பணிவரன்முறை - சம்பந்தமாக

பார்வை : 1. முதன்மை தலைமைப் பொறியாளர் நீஆது மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செ.மு.க.எண்.S2 (2)/40254/2010 நாள்.13.01.2016.

2. உச்சநீதிமன்ற வழக்கு தீர்ப்பு SLP No. 7794/1997.

பார்வையில் கண்டுள்ள செயல்முறை ஆணை மூலம் 33 பதவி பெயர் மாற்றம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு பணிவரன்முறை (Regularisation) ஆணை வழங்கப்பட்டது.

இதில் உதவிப் பொறியாளர் பதவி பெயர் மாற்றம் பெற்ற தேதியிலிருந்து பணிவரன்முறை செய்யாமல் பதவி பெயர் மாற்ற ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அது விதிகளுக்கும், நியாயத்திற்கும் புறம்பான உச்சக்கட்ட அநீதியாகும்.

பார்வை 2 ல் கண்டுள்ள உச்சநீதிமன்ற தீர்ப்பில் பகுதி நேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு அவருடைய பகுதி நேரப் பட்டப்படிப்பு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பதவி பெயர் மாற்றம் வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிவரன்முறை ஆணை பார்வை 2 ல் கண்ட உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிரானது ஆகும்.

மேலும் பதவி பெயர் மாற்றம் ஒரு தேதியும் பணிவரன்முறை ஒரு தேதியும் வழங்குவது நடைமுறைக்கும், விதிகளுக்கும், உச்சநீதி மன்ற தீர்ப்புக்கும் எதிரானதும், முரணானதும் ஆகும்.

உதாரணமாக 2004 ஆம் ஆண்டு பகுதி நேர பட்டப்படிப்பு படித்த இரண்டு பேருக்கு 2006 ஆம் ஆண்டு ஒருவருக்கும், 2014 ஆம் ஆண்டு ஒருவருக்கும் உதவிப் பொறியாளர் பதவி பெயர் மாற்ற ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர் பதவி பெயர்மாற்றம் பெற்ற மேற்கண்ட இருவரில் ஒருவருக்கு 2006 ஆம் ஆண்டும் இன்னொருவருக்கு 2014 ஆம் ஆண்டும் பணிவரன்முறை (Regularisation) ஆணை வழங்கியது, உச்சக்கட்ட அநீதி ஆகும்.

நிர்வாக காரணங்களினால் தாமதமாக பதவி பெயர் மாற்ற ஆணை வழங்கப்படுகிறது. இது நிர்வாக தவறாகும். சம்பந்தப்பட்ட தனி நபர்களின் தவறு அல்ல. 2005 ஆம் ஆண்டு பகுதி நேர பட்டப் படிப்பு முடித்து பதவி பெயர் மாற்றம் பெற தகுதியுள்ளவர்களுக்கு இன்னும் பதவி பெயர் மாற்றம் வழங்கப்படாமல்

ஆண்டுக்கணக்கில் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் கோப்பு தேங்கிக்கிடப்பது இதற்கு சான்று.

எனவே உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் பெற்ற தேதியிலிருந்து பணிவரன்முறை (Regularisation) வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை -5

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:296 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 30.06.2016)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S. திருமாறன் | முதன்மைத் தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை |
| 2. | P. சீனிவாசன் | தலைமைப் பொறியாளர், |
| 3. | R. ரவிராஜ் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 4. | A. ஜேம்ஸ்லூர்துசாமி | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 5. | G. சிவக்குமார் | செயற்பொறியாளர் |
| 6. | M. நடேசன் | செயற்பொறியாளர் |
| 7. | T. ரத்தினவேல் | செயற்பொறியாளர் |
| 8. | A. ஜெயலெட்சுமி | மின்பொறியாளர் |
| 9. | A. செல்வராஜ் | உதவி செயற்பொறியாளர் |
| 10. | B. நாகராஜன் | உதவி செயற்பொறியாளர் |
| 11. | P. இராமசாமி | உதவி செயற்பொறியாளர் |
| 12. | V. ஆனந்தன் | உதவி செயற்பொறியாளர் |
| 13. | S. குமாரசுவாமி | உதவி செயற்பொறியாளர் |
| 14. | M.L. லோகநாதன் | உதவி செயற்பொறியாளர் |
| 15. | P. சுப்ரமணி | உதவி செயற்பொறியாளர் (மின்) |
| 16. | K. பால்ராஜ் | தலைமை வரைதொழல் அலுவலர் |
| 17. | V. சண்முகம் | தலைமை வரைதொழல் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்கே. பிரபாகர்**
அரசு முதன்மைச் செயலாளர்

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2016

கல்விப் பரிசு திட்டத்தில் கலந்துக்கொள்ள விரும்புபவர்கள் 30.07.2016 முன்னதாக மையச் சங்கத்திற்கு குறிப்பிட்ட படிவங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அனுப்பியவர்கள், தாங்கள் அனுப்பியுள்ள படிவங்கள் மையச்சங்கத்திற்கு வந்து சேர்ந்துள்ளதா என்பதை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- பொறி.எஸ்.கே.கருப்பசாமி**
**வெளியீட்டுச்செயலாளர்.**

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை இணைச்செயாளர் பொறியாளர் மா. பாலகிருஷ்னன் இ.பொ அவர்களின் தகப்பனார் எம். மாரியப்பன் (வயது 83) அவர்கள் 05.06.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை இணைச்செயாளர் பொறியாளர் பி.சக்திவேல் உ.பொ (மின்) அவர்களின் தகப்பனார் கே. பெரியண்ணன் அவர்கள் 07.06.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் பி.புகழேந்தி இ.பொ அவர்கள் 21.06.2016 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2016 /நாள் 30.06.2016ன் படி 30.06.2016 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | S. முத்தழகன் (பிறந்த தேதி 14.06.1958) | இளம் பொறியாளர் |

சு. திருமாறன்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,
(ம) தலைமைப் பொறியாளர் (பொது)

**OFFICE OF THE ENGINEER - IN - CHIEF, WRD AND CHIEF ENGINEER (GI.), PWD., CHEPAUK, CHENNAI - 600 005.**

**PRESENT:** **ER. S. THIRUMARAN, M.E.,**
**Engineer – in – Chief, WRD and**
**Chief Engineer (GL.), PWD.**

**Proceedings No. S2(2) / 30863 / 2014 / dt: 23.06.2016.**

**Sub:** Establishment - T.N.E.S - Appointment of Junior Engineers of T.N.P.W.D as Assistant Engineers on acquiring Engineering degree qualification by recruitment by transfer - Order issued.

**Ref:** 1. Govt. Lr. No. 9876 / B2 / 2005 - 2 / PWD / dt. 04.05.2006.
2. Govt. Lr. N0. 9873 / B2 / 2005 - 9 / PWD / dt. 01.12.2006.
3. Govt. Lr. N0. 1910/A1/2012-17/PWD/dt. 27.09.2012
4. Govt. Lr. N0. 1910/A1/2012-20/PWD/dt. 12.10.2012
5. Govt. Lr. N0. 21340/A1/2013-2/PWD/dt. 20.03.2014
6. This office Letter No. S2(2)/30863 / 2014, Dt. 10.04.2014.
7. Applications received from concerned Chief Engineers

-------

In accordance with the provisions contained in Rule 2(a) and 5 of "Branch-I-Public Works" under part II of the Special rules for Tamil Nadu Engineering Services and as per the instructions contained in the Government letters 1st and 2nd cited, the personnel mentioned in the Annexure to this order who have acquired degree in Engineering after entering service as Junior Engineers are appointed as Assistant Engineers (Civil) by recruitment by transfer, with effect from the date of proceedings in which redesignation was ordered. And also this order is issued under the following conditions.

2. This order is issued subject to the outcome of the related Writ Petitions pending before the Hon'ble High Court of Madras and also subject to the clarificatory orders to be issued by the Government with reference to the orders issued in G.O. Ms. No. 66 / PWD / Dt. 12.03.2007.

3. Even though the Assistant Engineers are now newly appointed under redesignation, those seniority will be still continued in the Junior Engineers post only, as per the judgement orders issued by the Hon'ble Supreme Court of India, towards the seniority fixed for Thiru P. Thirmal and Thiru J. Ananda Sivakumar vide C.A. Nos. 10660-10662/2013, (SLP Civil Nos. 31761 - 31763/2009) dt. 27.11.2013.

4. In accordance with Rule 7(a) of the Special Rules for Tamil Nadu Engineering Services, the Assistant Engineers are deemed to have been placed on probation from the date of appointment as Assistant Engineers for a total period of two years on duty within a continuous period of three years.

5. The individuals are eligible for the drawal of arrears of pay and allowances, if any, on account of this order with effect from the date of proceeding in which the redesignation is ordered.

ENCL: Annexure

S. Thirumaran,
Engineer - in - Chief - WRD and
Chief Engineer (Gl.) PWD.

To
The individuals
Through the Chief Engineers Concerned.
Copy to Engineer - in - Chief, (Buildings) & Chief Engineer (Buildings), Chennai Region, Chennai - 5.
Copy to the Chief Engineer, WRD., Chennai Region, Chennai.
Copy to the Chief Engineer, WRD., Trichy Region, Trichy.
Copy to the Chief Engineer, WRD., Madurai Region, Madurai.
Copy to the Chief Engineer, (Buildings), PWD., Trichy Region, Trichy.
Copy to the Chief Engineer, (Buildings), PWD., Madurai Region, Madurai.
Copy to the Plan Formulations, Chennai - 5.
Copy to the Chief Engineer, Technical Education, Chennai.
Copy to 'C1' Section.
Spare Copy.

/ Forwarded by Order /

SUPERINTENDENT.

## ANNEXURE - I

**List of Junior Engineers appointed as Assistant Engineer (Civil) by recruitment by transfer**
**(Annexure this office Proceedings No. S2(2) / 30863 / 2014, Dt.23.06.2016)**

| Sl. No. | Name & Date of Birth (Thiruvalargal) | Feeder Post from which appointed as JE | Date of Regularisation in the post of JE | Date of completion of probation in the Feeder post JE or Feeder Post (T.A.) | Qualification acquired after entering service as JE | Name of the University and Registration No. | Date of Publication of Engg. Degree Result | Whether genuineness certificate has been obtained from the University concerned | Date of appoint-ment as AE by recruit-ment by transfer | Region/ Organisation in which now working |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | S. Ganesa Moorthy 16.05.1965 | Technical Assistant | 24.11.2004 AN | 31.05.1998 FN | B.E. (Civil) | Madurai Kamaraj University 9720006 (Part Time) | 28.01.2005 | yes | Passed | CE, WRD/ Madurai |
| 2. | C. Mohan 01.12.1961 | Technical Assistant | 17.04.2003 FN | 19.02.2000 AN | B.E (Civil) | Periyar University Salem. UG9912054 (Part Time) | 11.07.2003 | yes | Passed | Buildings/ Madurai |
| 3. | V. Rajendran 29.07.1962 | Technical Assistant | 12.11.2004 FN | 29.07.2001 | B.Tech (Civil) | VIT University Vellore 01BCL 841 (Part Time) | 17.01.2006 | Yes | Passed | WRD/ Chennai |
| 4. | A. Rabindran 28.07.1966 | Overseer | 30.12.2006 FN | 06.12.2000 AN | B.Tech (Civil) | SASTRA University Thanjavur 06BCL826 (Part Time) | 02.06.2010 | Yes | Passed | WRD/ Trichy |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 . S. Babu<br>17.04.1971 | Overseer | 14.06.2007<br>FN | 31.05.2006<br>AN | B.Tech.<br>(Civil) | VIT<br>University<br>Vellore<br>02BCL 803<br>(Part Time) | 23.01.2009 | yes | Passed | C.E., ERD/<br>Chennai Region<br>Chennai |
| 6 . S. Ayyanar<br>17.04.1964 | Overseer | 04.03.2002<br>FN | 31.10.1999<br>AN | B.E.<br>(Civil) | Bharathidasan<br>University<br>Tiruchirapalli<br>E410008<br>(Part Time) | 23.07.2003 | yes | Passed | C.E., ERD/<br>Trichy Region<br>Trichy |
| 7 . A. Rajachidambaram<br>10.06.1966 | Overseer | 01.02.2008<br>FN | 16.08.2005 | B.Tech.<br>(Civil) | VIT<br>University<br>Vellore<br>04BCL808<br>(Part Time) | 31.08.2008 | yes | Passed | C.E., ERD/<br>Trichy Region<br>Trichy |
| 8 . v. Padavettan<br>03.09.1965 | Technical<br>Assistant | 15.12.2008<br>FN | 30.06.2005<br>AN | B.Tech<br>(Civil) | VIT<br>University<br>Vellore<br>06BCL813<br>(Part Time) | 21.06.2010 | yes | Passed | EIC (B)& CE (B)<br>Chennai Region<br>Chennai |
| 9 . D. Chandran<br>12.03.1965 | Technical<br>Assistant | 01.12.2008<br>FN | 30.06.2003<br>AN | B.E.<br>(Civil) | Vinayaka<br>Mission<br>University<br>Salem<br>3420815025<br>(Part Time) | 07.07.2012 | yes | Passed | C.E., ERD/<br>Chennai Region<br>Chennai |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 . R. Subramanian 13.05.1966 | Overseer | 03.10.2010 AN | 01.01.2008 FN | B.E. (Civil & Structural) | Annamalai University Chidambaram 06152056 (Part Time) | 06.10.2010 | yes | Passed | C.E., WRD/ Trichy Region Trichy |
| 11 . S. Amuthavalli 20.04.1967 | Technical Assistant | 18.12.2008 | 30.06.2000 | B.E. (Civil) | Anna University Chennai 105010181002 (Part Time) | 29.05.2014 | yes | Passed | C.E., Technical Education Chennai - 25 |
| 12 . K. Seralathan 10.05.1966 | Technicalr Assistant | 15.12.2008 FN | 31.12.2006 AN | B.Tech. (Civil) | VIT University Vellore 06BCL820 (Part Time) | 21.06.2010 | yes | Passed Chennai | C.E., WRD/ Chennai Region |
| 13 . D. Govindarajan 10.12.1964 | Overseer | 01.02.2007 AN | 04.10.2004 FN | B.E. (Civil) | Annamalai University Chidambaram 02151024 (Part Time) | 07.03.2007 | yes | Passed | C.E., WRD/ Trichy Region Trichy |
| 14 . Tml. V. Swarnam 04.06.1964 | Technical Assistant | 15.12.2008 FN | 30.06.2004 AN | B.E. (Civil) | Vinayaka Mission University Salem 342071646 (Part Time) | 23.08.2011 | yes | Passed | C.E. Plan Formulation Chennai - 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 . J. Raveendrani 10.01.1968 | Technical Assistant | 22.12.2008 FN | 30.06.2006 AN | B.E. (Civil) | Anna University of Technology, Tiruchirapalli 901-GP 08405036 (Part Time) | 31.03.2012 | yes | Passed | C.E (B) Madurai, Region Madurai - 2. |
| 16 . J. Krishnarajendra Singh 20.06.1965 | Technical Assistant | 24.11.2004 AN | 31.05.200 FN | B.E. (Civil) | Anna University Chennai 20015307 (Part Time) | 10.06.2005 | yes | Passed | C.E., WRD/ Chennai Region Chennai |
| 17. V. Chandramouli 28.04.1959 | Technical Assistant | 07.01.2009 FN | 31.12.2002 AN | B.E. (Civil) | Madurai Kamaraj University SR20088421 (Part Time) | 30.04.2009 | yes | Passed | CE, Plan Formulation Chennai - 5 |
| 18. S. Sampathkumar 28.06.1967 | Technical Assistant | 12.12.2008 FN | 31.12.2004 AN | B.Tech. (Civil) | DR. M.G.R University Chennai - 95. E05BCE2018 (Part Time) | 09.01.2009 | yes | Passed | E.I.C.(B)& C.E.(B), Chennai Region, PWD Region, PWD |
| 19. Kuppusamy. L.S 27.02.1963 | Technical Assistant | 01.05.2003 FN | 01.06.1999 FN | B.E. (Civil) | Manonmaniam Sundaranar University Tirunelveli 00517 (Part Time) | 30.04.2009 | yes | Passed | CE, / Plan Formulation Chennai - 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 . A. Manoharan 01.05.1959 | Technical Assistant | 16.12.2004 FN | 01.01.2003 FN | B.E. (Civil) | Vinayaka Mission University Salem 3420815090 (Part Time) | 01.07.2012 | yes | Passed | C.E..Bldgs/ Trichy |
| 21 . R.S. Sundaram 13.05.1968 | Technicalr Assistant | 08.12.2008 AN | 31.05.2006 AN | B.Tech. (Civil) | VIT University Vellore 06BCL821 (Part Time) | 02.06.2010 | yes | Passed | E.I.C.(B)& C.E.(B), Chennai Region, PWD Region, PWD |
| 22 . V. Prabhakaran 15.07.1968 | Overseer | 12.11.2012 AN | 03.08.2008 FN | B.Tech. (Civil) | PRIST University Thanjavur P6111204056 (Part Time) | April 2015 | yes | Passed | C.E., WRD Trichy Region Trichy |

S. Thirumaran,
Engineer - in - Chief , WRD &
Chief Engineer (Gl.) PWD.,

/ Forwarded by Order /

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

வழங்கும்

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2016

10 அல்லது 12 தேறியவர்களுக்கு மட்டும்

விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)

1. மாணவர் / மாணவியர் பெயர் ..........................................................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..........................................................................
3. உறுப்பினர் எண் ..........................................................................
4. முகவரி ..........................................................................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை ..........................................................................
6. 10 அல்லது 12-ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) ............................
7. 10 அல்லது 12-ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும் .....................
8. 10 அல்லது 12-ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா? ஆம் / இல்லை ...................

சங்க உறுப்பினர் கையொப்பம் மாணவ / மாணவி கையொப்பம்

## சான்றிதழ்

பொறியாளர் ................................ கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண் ................ / சாதாரண உறுப்பினர் எண் .................................. தொடர்ந்து 2014, 2015 மற்றும் 2016ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2016-ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே ......................... மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2014............................ | ........................... | .................. |
| 2015............................ | ........................... | .................. |
| 2016............................ | ........................... | .................. |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்.........................................................கிளை

## தலைமைச் சங்கம்

மாணவர் / மாணவியின் பெயர் ..........................................................................

சங்க உறுப்பினர் பெயர் ..........................................................................

உறவு முறை ..........................................................................

2016ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று ........................................................பரிசாக ரூ...........................பெறுகிறார்.

பொதுச் செயலாளர் தலைவர்

# தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2016

(10-ம் வகுப்புக்கும், 12-ம் வகுப்புக்கும் தனித் தனியாக)

**10-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ. 3000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 2000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 1000/- வீதம்

**12-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ.5000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 3000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 2000/- வீதம்

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்த தலைவர்கள் பொறியாளர் எஸ்.கணபதி மற்றும் பொறியாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980-ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2016-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

2016-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 2000/- (ரூபாய் ஒரு இரண்டாயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு

திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

## தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:

1. 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5 என்ற முகவரியிட்டு ரூ. 50 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூறிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2016-க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2016 க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றிய விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

# இயங்கும் உலகம்

## சேலம் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 12.06.2016 அன்று மாலை 3.30 மணிக்கு சேலம் பொதுப்பணித்துறை வளாகம் கிளைச்சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கிளையின் தலைவர் பொறிஞர்.தி.உதயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுசெயலாளர் பொறிஞர்.த.முருகேசன், மாநில துணைத்தலைவர் பொறிஞர்.எஸ்.பாஸ்கரன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் பொறிஞர்.சி. பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளையின் இணைச்செயலாளர் பொறிஞர்.பி.பாலசுப்ரமணியம் வரவேற்று பேசினார். பின்னர் கிளைத்தலைவர் உரைக்குப்பின் கிளைச்செயலாளர் பொறிஞர் இரா. வேதநாராயணன் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்து பேசினார். தொடர்ந்து மேற்குமண்டல செயலாளர் அவர்கள் மையசங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் மாநில துணைத்தலைவர் அவர்கள் தனது உரையில் மத்திய சங்க நடவடிக்கைகள் குறித்தும். கூட்டங்களில் உறுப்பினர்கள் திரளாக தவறாமல் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார். அதனை தொடர்ந்து மைய சங்க பொறுப்பாளர்கள் மூலம் உதவிசெயற்பொறியாளாகள் பணி ஓய்வு பெற்றதற்காக பொறிஞர். எஸ். பால்ராஜ், பொறி. மெ. பிரேம்குமார், பொறி. த. உதயகுமார், பொறி.கே.எம். ஜெனார்த்தனன் ஆகியொருக்கு நினைவுபரிசு வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பட்டது.

மாநில பொது செயலாளர் அவர்கள் தமது உரையில் உதவிப்பொறியாளர் 72 நபர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்று தந்தது குறித்தும், இளம்பொறியாளர் / உதவிப்பொறியாளர் பணிவரன்முறை, பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராக பணி உயர்வு ஆணை வழங்கியது குறித்தும், பணி ஆய்வாளர் பதவியிலிருந்து வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு குறித்தும், உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் குறித்தும் விரிவாக உரையாற்றினார்.

பின்னர் உறுப்பினர்கள் கேட்ட விளக்கங்களுக்கு மாநில பொதுச்செயலாளர் விரிவான பதிலுரை அளித்தார். மூத்த பொறியாளர் பொறி. ம. பலராமன் அவர்கள் உடல்நலம் பேணுதல் குறித்து விரிவாக பேசினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தேர்வாணையம் மூலம் இளம்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. இளம் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளராக பணி பெயர்மாற்றமும் (Redesignation) மற்றும் இளம்பொறியாளர் / உதவிப்பொறியாளர் அனைவருக்கும் பணிவரன்முறை பெற்றுதர கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் விரைவில் பெற்றுத்தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கு மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணி இடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்புமீது நடவடிக்கை எடுத்து ஆணை பெற்று தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிறைவாக கிளையின் துணைத்தலைவர் பொறிஞர்.பி. கண்ணன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

---

பொதுப்பணித்துறை

பணி ஒய்வு

அன்பார்ந்த சகோதர, சகோதரிப் பொறியாளர்களுக்கு,



பா. நாகராஜன்
உதவி செயற் பொறியாளர்,
பொதுப்பணித்துறை

வணக்கம், பெருமை மிக்க தமிழ்நாடு மாநிலத்தின் பழமையினை பறை சாற்றிக் கொண்டிருக்கும் பாரம்பரியம் மிக்க பொதுப்பணித்துறையில் செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், கரூரின் கட்டுப்பாட்டில், உதவி செயற்பொறியாளராக, கட்டிட கட்டுமான உபகோட்டம், கரூர் மற்றும் செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளராக பணியாற்றி எனது அரசுப் பணியினை 30.06.2016-ல் நிறைவு செய்கிறேன். கைத்தறி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் கரூர் மாவட்டத்தில் பிறந்து எனது வாழ்க்கை பயணத்தைத் தொடர்ந்தேன்.

நான் கடந்து வந்த பாதை........

1975-வரை – அரசு உயர்நிலைப்பள்ளி காணிபாளம்பட்டி.,
1975-1978 – சிவில் பட்டயக்கல்வி, நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி,
1978-1979 – தொழில் நுட்ப உதவியாளர், தொகுப்பூதியம், அரியலூர் சிமெண்ட் புராஜக்ட், அரியலூர்.

1979-1982 – NMR தொழில்நுட்ப உதவியாளர், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், திண்டுக்கல்.

1982-1985 – இளநிலை வரைதொழில் அலுவலர், புயல் காப்பக கட்டட கட்டுமானக் கோட்டம், பரமக்குடி.

1985-1986 – இளநிலை வரைதொழில் அலுவலர், சித்தமல்லி நீர்த்தேக்கத் திட்டக் கோட்டம், ஜெயங்கொண்டம்.

1986-1991 – இளநிலை வரைதொழில் அலுவலர், நொய்யல் கால்வாய் விரிவாக்க கோட்டம், கரூர் மற்றும் உபகோட்டம், கரூர் பரமத்தி,

1991-1997 – இளநிலை வரைதொழில் அலுவலர், ஏரிகள் நவீனப்படுத்தும் வட்ட அலுவலகம், மன்னார்புரம், திருச்சி.

(1992-1995 – மண்டல பொறியியல் கல்லூரி, துவாக்குடி, திருச்சியில் பகுதிநேர பி.இ. பட்டப்படிப்பு)

1997-1999 – இளநிலை வரைதொழில் அலுவலர், மற்றும் சூப்பர் நியுமெரரி வரைதொழில் அலுவலர், ஏரிகள் நவீனப்படுத்தும் கோட்டம், புதுக்கோட்டை.

1999-2010 – உதவிப்பொறியாளர், கட்டட (க & ப) பிரிவு, துவரங்குறிச்சி, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், மணப்பாறை.

2010-2013 – உதவிப் பொறியாளர், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு-1, கரூர் உபகோட்டம்.

2013-2015 – உதவி செயற்பொறியாளர், கட்டட கட்டுமான உபகோட்டம், கரூர்.

2015-2016 – செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர், கட்டட கட்டுமானம் மற்றும், பராமரிப்புக் கோட்டம், கரூர்.

இத்தருணத்தில் நமது சங்க மூத்தப் பொறியாளர்கள் தியாகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற பகுதிநேர பட்டக் கல்வியினால் கிடைத்த பலன் என்பதே உள்ளங்கை நெல்லிக்கனி, அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை சிரம் தாழ்த்தி சமர்ப்பிக்கிறேன்.

என்னுடைய பணிக்காலங்களில் எனக்கு நல்வழி காட்டி என்னை வழி நடத்திய மூத்தோர் அனைவருக்கும் எனது நன்றியினை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

என்னுடைய பணியின்போது, என்னுடன் பணியாற்றிய அனைத்து தரப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் என்னுடைய பணி சிறக்க உறுதுணையாக இருந்தமைக்காக எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டு வாழ்வில் எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்று ஆண்டவனை வேண்டுகிறேன்.

அன்புடன்,

பா. நாகராஜன்

# நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.பிரேம்குமார் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 10,000/- (ரூபாய் பத்து ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனீ கிளை உறுப்பினர் பொறியாளர் வி.பாலமுருகன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 5000/- (ஐந்து ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.கே.கருணாகரன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை 2375/- (ரூபாய் இரண்டாயிரத்து முன்னுற்றி எழுபத்தைந்து) மையசங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.பால்ராஜ் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி கிளை தலைவர் பொறியாளர் எஸ் பொன்னுசுவாமி உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை 1650/- (ரூபாய் ஆயியிரத்து ஆறுநுற்றி ஐம்பது) பொறியியல் இல்ல புனரமைப்பு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.சிவராமன் இளம் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் கே.எம்.ஜனார்தணன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள்பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மேற்கு மண்டல செயலாளர் பொறியாளர் டி. உதயகுமார் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள்பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.அய்யனார் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.கணேசமூர்த்தி உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் ஏ.ரபீந்திரன் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் டி.கோவிந்தராஜன் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் டி.சந்திரன் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் வி.படவேட்டான் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.சேரலாதன் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் வி.சொர்ணம் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.எஸ்.சுந்தரம் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ..2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - துத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் எல்.எஸ்.குப்புசாமி உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.பாபு உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் ஜெ.கிருஷ்னராஜேந்திரசிங் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.சம்பத்குமார் உதவிப்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ.1500/- (ஆயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நன்றி தினமலர் நாள் 29.05.2016

தினமலர்
மதுரை | 29.5.2016

# பொதுப்பணித்துறைக்கு ஐ.ஏ.எஸ்., தலைமை

## பொறியியல் சங்கம் வலியுறுத்தல்

மதுரை, மே 29 — 'பொதுப்பணித்துறையில் நேர்மையான நிர்வாகம் நடக்க துறை தலைமைக்கு ஐ.ஏ.எஸ்., அதிகாரியை நியமிக்க வேண்டும்,' என, தமிழ்நாடு பொறியியல் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மதுரையில் இச்சங்க மாநில செயற்குழுக் கூட்டம் நேற்று நடந்தது. மாநில தலைவர் பஞ்சவர்ணம் தலைமை வகித்தார். மைய மண்டல செயலாளர் மோகன்குமார், கிளை செயலாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தனர். பொதுச் செயலாளர் த.முருகேசன் பேசினார்.

பொதுப்பணித்துறையில் 2007க்கு முன் உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் பதவி பெற்றவர்களை கட்டடப்பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என பிரிக்காமல் பொதுவான முதுநிலை அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும். காலியான இளநிலை பொறியாளர், வரைவாளர் பதவிகளை நிரப்ப வேண்டும். நேர்மையான நிர்வாகம் நடக்க துறை தலைமைக்கு ஐ.ஏ.எஸ்., அதிகாரியை நியமிக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மதுரையில் நடந்த தமிழ்நாடு பொறியியல் சங்க செயற்குழு கூட்டத்தில் பொதுச் செயலாளர் முருகேசன் பேசினார். இடமிருந்து சங்க நிர்வாகிகள் கண்ணன், பஞ்சவர்ணம், பாஸ்கரன்.

# தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ.ப.து.)

சேப்பாக்கம் சென்னை - 600 005.

## 2016-2017 ஆம் ஆண்டு கிளைப் பொறுப்பாளர் தேர்வு கிளைப் பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு

| வரிசை எண் | கிளையின் பெயர் | கூட்ட நாள் | கலந்துகொள்ளும் மையச் சங்க பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 06.08.2016 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எஸ். கண்ணன்<br>அமைப்பு & சட்டச் செயலாளர் |
| **வடக்கு மண்டலம்** | | | |
| 2. | காஞ்சிபுரம் | 16.07.2016 (மு.ப.) | பொறி. எஸ். கண்ணன்<br>அமைப்பு & சட்டச் செயலாளர்<br>பொறி. கே. கமால்தீன்<br>நிதிச் செயலாளர்<br>பொறி. என். புண்ணியகோட்டி<br>பொங்கும்நிதி செயலாளர்<br>பொறி. பி. நாகலிங்கம்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| 3. | வேலூர் | 09.07.2016 (மு.ப.) | பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. கே. கமால்தீன்<br>நிதிச் செயலாளர்<br>பொறி. எஸ்.கே. கருப்பசாமி<br>வெளியீட்டு செயலாளர்<br>பொறி. பி. நாகலிங்கம்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| 4. | கடலூர் | 24.07.2016 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. எஸ். கண்ணன்<br>அமைப்பு & சட்டச் செயலாளர்<br>பொறி. பி. நாகலிங்கம்<br>வடக்கு மண்டல செயலாளர் |
| **கிழக்கு மண்டலம்** | | | |
| 5. | திருச்சி | 23.07.2016 (பி.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத்தலைவர் |

| | | | |
|---|---|---|---|
| 6. | தஞ்சாவூர் | 30.07.2016 (பி.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. ஆர். தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| 7. | திருவாரூர் - நாகை | 30.07.2016 (மு.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. ஆர். தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| 8. | புதுக்கோட்டை | 06.08.2016 (மு.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத் தலைவர்<br>பொறி. ஆர். தயாளகுமார்<br>கிழக்கு மண்டல செயலாளர் |
| தெற்கு மண்டலம் | | | |
| 9. | விருதுநகர் | 28.07.2016 (பி.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. எச். ஜாகிர்உசேன்<br>தெற்கு மண்டல செயலாளர் |
| 10. | திருநெல்வேலி - தூத்துக்குடி | 04.08.2016 (பி.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எச். ஜாகிர்உசேன்<br>தெற்கு மண்டல செயலாளர் |
| 11. | கன்னியாகுமரி | 29.07.2016 (பி.ப.) | பொறி. எஸ். கண்ணன்<br>அமைப்பு & சட்டச் செயலாளர்<br>பொறி. எச். ஜாகிர்உசேன்<br>தெற்கு மண்டல செயலாளர் |
| மேற்கு மண்டலம் | | | |
| 12. | தர்மபுரி | 16.07.2016 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. சி. பன்னீர்செல்வம்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| 13. | சேலம் | 16.07.2016 (பி.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. சி. பன்னீர்செல்வம்<br>மேற்கு மண்டல செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 14. | ஈரோடு | 31.07.2016 (பி.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. சி. பன்னீர்செல்வம்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| 15. | கோவை-பொள்ளாச்சி | 31.07.2016 (மு.ப.) | பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்<br>பொறி. எஸ். பாஸ்கரன்<br>மாநில துணைத்தலைவர்<br>பொறி. சி. பன்னீர்செல்வம்<br>மேற்கு மண்டல செயலாளர் |
| **மைய மண்டலம்**<br>16. | திண்டுக்கல் | 30.07.2016 (மு.ப.) | பொறி. கே. கமால்தீன்<br>நிதிச் செயலாளர்<br>பொறி. எஸ்.கே. கருப்பசாமி<br>வெளியீட்டு செயலாளர்<br>பொறி. சி.பி. மோகன்குமார்<br>மைய மண்டல செயலாளர் |
| 17. | தேனி | 15.07.2016 (பி.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. சி.பி. மோகன்குமார்<br>மைய மண்டல செயலாளர் |
| 18. | மதுரை | 16.07.2016 (மு.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. எஸ்.கே. கருப்பசாமி<br>வெளியீட்டு செயலாளர்<br>பொறி. சி.பி. மோகன்குமார்<br>மைய மண்டல செயலாளர் |
| 19. | சிவகங்கை | 23.07.2016 (மு.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. கே. கமால்தீன்<br>நிதிச் செயலாளர்<br>பொறி. சி.பி. மோகன்குமார்<br>மைய மண்டல செயலாளர் |
| 20. | இராமநாதபுரம் | 08.07.2016 (பி.ப.) | பொறி. எம். பஞ்சவர்ணம்<br>மாநில தலைவர்<br>பொறி. சி.பி. மோகன்குமார்<br>மைய மண்டல செயலாளர் |

# தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.துறை, சேப்பாக்கம், சென்னை-5.
## தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் 2016-2017

சங்க பொதுக்குழுக்கூட்டம் வேலூரில் ஆகஸ்டு 13 மற்றும் 14 தேதிகளில் காயத்ரி மஹால் எண். 82, குருதோப்பு, சத்துவாச்சாரி அலகாபாத் பேங்க் அருகில், வேலூர் - 9.நடைபெறும். அது சமயம் 2016-2017 ஆண்டிற்கான கீழ்க்கண்ட தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் பதவிக்கு தேர்தல் நடைபெறும்.

1. தலைவர்
2. துணைத்தலைவர்
3. பொதுச் செயலாளர்
4. செயலாளர் (அமைப்பு & சட்டம்)
5. செயலாளர் (வெளியீடு)
6. செயலாளர் (நிதி)
7. செயலாளர் (பொங்கும் நிதி)

**மண்டலச் செயலாளர்கள்**

8. வடக்கு 9. கிழக்கு 10.தெற்கு 11. மேற்கு 12. மையம்

**நெறிமுறைகள்**

1. போட்டியிட விரும்பும் உறுப்பினர் கடந்த 2014-2016 மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சங்க உறுப்பினர்களாகவோ அல்லது வாழ்நாள் உறுப்பினராகவோ இருக்க வேண்டும்.
2. வேட்பாளர் பொங்கும் நிதி உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
3. வேட்பாளர் பெயர் உரிய வேட்பு மனுவின் வேட்பாளர் சம்மதத்துடன் ஒருவராலோ (அ) பலராலோ முன்மொழிந்து, வழி மொழிந்திருத்தல் வேண்டும்.
4. உறுப்பினர்கள் எத்தனை பதவிகளுக்கு போட்டியிட்டாலும் வெற்றி பெற்ற பின் அவரது விருப்பப்படி ஏதாவது ஒரு பதவியைத்தான் தக்க வைத்துக் கொள்ள முடியும்.
5. வரிசை எண்.3 லிருந்து 7 வரையிலுள்ள பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் சென்னை பெருநகர எல்லைக்குள் பணியாற்றுபவராக இருத்தல் அவசியம்.
6. மண்டல செயலாளர்கள் பதவிகளுக்கு போட்டியிட விரும்புபவர்கள் அந்தந்த மண்டல எல்லைக்குள் பணி புரிய வேண்டும்.

| மண்டலம் | | கிளைகள் |
|---|---|---|
| அ. மண்டலம் இல்லை | : | சென்னை |
| ஆ. வடக்கு மண்டலம் | : | காஞ்சிபுரம், வேலூர், கடலூர். |
| இ. கிழக்கு மண்டலம் | : | திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் -நாகை, புதுக்கோட்டை |
| ஈ. தெற்கு மண்டலம் | : | விருதுநகர், திருநெல்வேலி -தூத்துக்குடி, கன்னியாகுமரி, |
| உ. மேற்கு மண்டலம் | : | தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர்-பொள்ளாச்சி. |
| ஊ. மைய மண்டலம் | : | திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம். |

வேட்பு மனுக்கள் நேரிடையாக எல்லா பதவிகளுக்கும் தேர்தல் நாள் 13.08.2016 அன்று தேர்தல் ஆணையரால் பிற்பகல் 2.00 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளப்படும்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதி படைத்தவர்கள். தேர்தல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்.

**வாக்காளர்கள்**

| | | |
|---|---|---|
| மையச் சங்க பொறுப்பாளர்கள் | : | 12 |
| கிளைச் சங்க பொறுப்பாளர்கள்20 X 6 | : | 120 |
| | | 132 |

அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு மையச் சங்க பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**-பொறியாளர். எஸ்.கண்ணன், செயலாளர் அமைப்பு & சட்டம்**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.பிரேம்குமார் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்




தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் கே.எம்.ஜனார்த்தனன் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் மாநில துணைத்தலைவர் நினைவுப்பரிசு வழங்குதல்



# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்



# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்





தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை,

சேப்பாக்கம், சென்னை - 5.

## மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற ஆகஸ்டு திங்கள் 13 மற்றும் 14 தேதிகளில் நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் வடக்கு மண்டலம் சார்பில் வேலூரில் நடைபெற உள்ளது.

**இடம் : காயத்ரி மஹால்**
**எண். 82, குருதோப்பு, சத்துவாச்சாரி**
**அலகாபாத் பேங்க் அருகில்**
**வேலூர் - 9.**

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பொறி. எஸ். கண்ணன்**
**செயலாளர் அமைப்பு & சட்டம்**

## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை தலைவர் பொறியாளர் தி.உதயகுமார் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் மேற்கு மண்டல செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்




தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.பால்ராஜ் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் மாநில துணைத்தலைவர் நினைவுப்பரிசு வழங்குதல்



Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2015-17 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**JULY 2016**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.பிரேம்குமார் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்




தொலைபேசி : சங்கம் : 28525786

இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**

**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:

தமிழ்நாடு பொறியியல் சங்கம்

சேப்பாக்கம், சென்னை - 600 005.

முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on 08-07-2016**

**REGD. NEWS PAPER**

POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL

POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5

PUBLISHED BY: Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.

PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75318